மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வட்டாரங்கள் ஏற்கெனவே பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மதுரையைப் பொறுத்தவரையில் அண்மையில் நிறைவேற்றப்படவிருக்கின்ற மசோதாவின்மூலம் மதுரையில் ஒரு கம்பெனியை நிறுவ இருக்கின்ற காரணத்தால், அவர் சொன்ன கஷ்டங்கள் இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளி குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) முதலமைச்சர்கள் மாநாட்டில் மாநிலங்களில் கூடுதல் வரி விதிக்க முதலமைச்சர்கள் இசைவுத் தெரிவித்ததாக கூறப்படுவது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of information. Recently the Chief Ministers' Conference was held and in the newspapers it is stated that certain taxes are going to be raised by the States and the Chief Ministers have agreed to it. I do not know how far it is correct. As the Hon. Chief Minister has not made any statement, will it be possible for him to tell this House as to what exactly transpired in that Conference and whether any assurance has been given to the Prime Minister that extra resources would be mobilised in the State ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அக்டோபர் 12-ம் நாளன்று டெல்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், மாநாட்டிற்குத் தலைமை வகித்த மத்திய அரசினுடைய நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் முதலமைச்சர்களிடத்திலே, இன்றைக்கு ஏற்பட்டுள்ள இந்திய அரசியல் சூழ்நிலைகளையெல்லாம் விரிவாக எடுத்துரைத்து இந்தச் சூழ்நிலையில் வங்கத்து அகதிகளை சமாளிக்க வேண்டிய பெரும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இவைகளையெல்லாம் ஈடுகட்டுவதற்கு இன்றைக்கு உள்ள பொருளாதார சூழ்நிலை மிகுந்த நெருக்கடியாக இருக்கிறது என்பதையும் எடுத்துரைத்து, அதற்கேற்ற வகையில் சில வரிகளைப் போட வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே தமிழ் நாடும் மற்ற மாநிலங்களும் பொதுவாக இந்திய பூபாகத்து மக்களும் எடுத்துக் கொண்டிருக்கிற உறுதிக்கேற்ப, இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நாம் எல்லா வகையான தியாகங்களையும் தேச நலனை முன்னிட்டுச் செய்ய வேண்டிய அடிப்படையில் எல்லா முதலமைச்சர்களும், இது போன்ற பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்திய அரசு மீள்வதற்கும், வங்கத்து அகதிகளை அவர்களுடைய வாழ்க்கையைப் பரிதாபகரமான சூழ்நிலையிலிருந்து காப்பாற்றுவதற்கும் ஏற்ற வசதிகளை இந்திய அரசு எடுப்பது பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லையென்று எல்லா முதலமைச்சர்களும் மத்திய நிதியமைச்சர் திரு. சவான் அவர்களிடத்தில் உறுதி அளித்தோம். அப்போது, 'சில வரிகள் போட வேண்டியிருக்கும்' என்கிற அளவில் மாத்திரம் நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் எடுத்துரைத்தாரேயன்றி வேறு விளக்கங்கள்

எதுவும் கூறவில்லை. முதலமைச்சர்களின் மாநாடு கூட மிக ரகசியமாகத்தான் நடைபெற்றது, அலுவலர்கள் யாரும் அனுமதிக்கப்படாமல் மாநாடு நடைபெற்றது. அதற்குப் பிறகு, பிரதம மந்திரியை முதலமைச்சர்கள் தனித்தனியாகச் சந்தித்து, பல விஷயங்கள் குறித்துப் பேசியிருக்கிறோம். அதன் தொடர்பாகத்தான், டெல்லியில் நிருபர்கள் என்னைச் சந்தித்தபோதும், தமிழகத்திற்கு வந்தபிறகு நிருபர்கள் என்னைச் சந்தித்தபோதும், "இந்தியப் பாதுகாப்புக்காக, குறிப்பாக இந்திய மக்கள்—சிறப்பாக தமிழ்நாட்டு மக்கள், மேலும் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்" என்று சொன்னேன். இன்றைக்கு டெல்லியிலிருந்து ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது எந்தவகையிலும் மாநில அளவிலே விதிக்கப்படுகின்ற வரிகளைப் பொறுத்தது அல்ல. நமது மாநிலமும் இந்திய நாட்டின் பாதுகாப்பை எண்ணி, நாம் ஆற்ற வேண்டிய பணிகளை எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் ஆற்றுவதற்கு முன்வர வேண்டும். இந்த வேண்டுகோளை, டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு விளக்கமாகத்தந்து, இது போதும் என்று கருதி அமர்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) நாக்ஸலைட் வன்முறை என்ற பெயரில் காவல்துறை பல மாவட்டங்களில் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.

MR. SPEAKER: I have received notice of adjournment motions from Thiru K. T. K. Thangamani regarding police action in the pretext of Naxalite violence, even in labour and kisan disputes as in Pallipalayam (Salem), Kadayampatti (Coimbatore), Alangudi (Tiruchy), Gudaloor (Madurai), B2 Station, Madurai, and Kalyanapuram (Ramanad West), etc.
and Kalyanapuram Ramanad West, etc.

I have also received similar adjournment motions from Thiru A. K. Subbiah with regard to Kadayampatti (Thanjavur district) and Gudalur (Nilgiris district), from Dr. H. V. Hande with regard to Gudaloor (Nilgiris district) and from Thiru K. Suppu with regard to closure of Saradha Studio, Madras.

I request the hon. Members to briefly explain how this matter comes within the purview of adjournment motions.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த அட்ஜெர்ன்மென்ட் மோஷனை 2-ம் தேதி பிற்பகல் கொடுத்துவிட்டேன், அவர்களுக்குத் தெரியும். சென்ற சட்டமன்றத் தொடர் முடிந்து 12 வாரங்கள் ஆகின்றன. இந்த 12 வார காலத்தில் ஏதாவது ஒரு தினத்தில் சம்பவங்கள் நடந்திருந்தாலும், அந்தச் சம்பவங்கள் 21-ம் தேதிக்கு முன்னால் ஒன்றிரண்டு தினத்திற்கு முன்னதாக நடந்ததாகக் குறிப்பிடப்படும். இவை சமீபத்தில்தான் நடந்தவை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவதாக ஆங்காங்கு போலீஸார் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் அப்பொழுதே விசாரணைக்குக் கொண்டுவரலாமென்றிருந்தாலும்கூட சில விஷங்கள் அத்துமீறிப் போன காரணத்தினால், ஒத்திவைப்புத் தீர்மான